தமிழ்நாடு அரசு

**மாநில திட்டக் குழு**



# தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2025-26

## முக்கிய அம்சங்கள்

# பொருளாதார ஆய்வறிக்கை

# 2025–26

## முக்கிய அம்சங்கள்

1. பெருந்தொற்றுக்குப் பிறகான பொருளாதார மீட்சியானது, உலகளாவிய வர்த்தகத்தை மறு வடிவமைப்புசெய்த கொள்கை மாற்றங்களுடன் ஒத்துப்போகிறது.

   பிப்ரவரி 25 முதல், அமெரிக்காவின் பல்வேறு கட்ட வரிவிதிப்பு மற்றும் எதிர்வினை நடவடிக்கைகள் வர்த்தகத்தின் நிச்சயமற்றதன்மையை அதிகப்படுத்தின. 2025இல் உலகப் பொருளாதார வளர்ச்சி 3.3% ஆக இருந்தது. 2024–25இல் 6.49% ஆக இருந்த இந்தியப் பொருளாதாரம், 2025–26இல் 7.4% எனும் வளர்ச்சியை எட்டியது. உலக அளவில் ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும், தமிழ்நாட்டுப் பொருளாதாரம் மீள்தன்மையுடையதாக இருக்கிறது.

2. பன்முகப் பொருளாதார அடித்தளம், வலுவான உட்கட்டமைப்பு, வளர்ச்சிக்கு வித்திடும் கொள்கைகள் ஆகியவற்றுடன் பொருளாதார மேம்பாட்டிலும் உள்ளடக்கிய வளர்ச்சியிலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. வலுவான சமூக நல மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கான முன்னெடுப்புகளுடன் கூடிய விரைவான தொழில்மயமாதலைக் கொண்டுள்ள தமிழ்நாட்டின் சமச்சீரான வளர்ச்சி மாதிரியானது, மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

3. தமிழ்நாட்டின் நீடித்த செயல்திறமானது, இந்தியாவின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திற்கும், மேம்பாட்டுக்கும் குறிப்பிடத்தக்கவகையில் பங்களித்துள்ளது. இந்திய நிலப் பரப்பில் 4% ஐயும், மக்கள்தொகையில் 6% ஐயும் மட்டுமே கொண்டிருந்தபோதும், 2024-25இல் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்குத் தமிழ்நாடு 9.4% பங்களிக்கிறது. 2024-25இல் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில், ரூ.31.19 இலட்சம் கோடியை எட்டியது. இது, 16% பெயரளவிலான வளர்ச்சி வீதத்தையும், 11.2% உண்மை வளர்ச்சி வீதத்தையும் காட்டியதோடு பெரிய மாநிலங்களில் உயர்ந்த அளவாகவும் இருந்தது.

4. ஒட்டுமொத்த அளிப்பின் விரிவாக்கத்தாலும் ஒட்டுமொத்த தேவையின் வலுவாலும் தமிழ்நாட்டின் நீடித்த பொருளாதார வளர்ச்சியானது முடுக்கிவிடப்பட்டுள்ளது. அளிப்பைப் பொறுத்தவரையில், குறிப்பிடத்தக்க வகையிலான உற்பத்தித் திறனாலும் மேம்பட்ட செயல்திறன்களாலும் தமிழ்நாடு பயனடைகிறது. தமிழ்நாடு உருவாக்கியுள்ள உறுதிப்படுத்தப்பட்ட மின்சார வசதிகள், விரிவான சாலை மற்றும் துறைமுகப் பிணைப்பு, நன்கு திட்டமிடப்பட்ட தொழில் வழித்தடங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பானது, தொழில் போட்டித்திறனை மேம்படுத்தியுள்ளது. எழுத்தறிவு, தொழில்கல்வி, திறன் மேம்பாடு ஆகியவற்றால் உருவாகியுள்ள உயர்நிலை மனித மூலதனமானது, உற்பத்தி மற்றும் சேவைத் துறைக்கான உற்பத்தித்திறன் மிக்கப் பணியாளர்களை உறுதிசெய்துள்ளது.

5. பாரம்பரிய மற்றும் நவீனத் தொழிற்துறைகளை உள்ளடக்கிய தமிழ்நாட்டின் பன்முகப்படுத்தப்பட்ட தொழில்துறை அடித்தளமானது, துடிப்புமிக்க குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான சூழலமைவோடு பரந்துபட்ட உற்பத்தித் துறை வளர்ச்சியை

உருவாக்கியுள்ளது. உற்பத்தித் தொழிற்துறையானது 2024–25இல் 14.74% உண்மை வளர்ச்சி வீதத்தை வலுவாகப் பதிவுசெய்துள்ளது, இது அகில இந்திய சராசரியான 4.5% ஐவிட மும்மடங்கு அதிகமானது. 2021–22 முதல் 2024–25 வரையிலான நான்காண்டுக் காலத்தில், 9.38% சராசரி உற்பத்தித் துறை வளர்ச்சி வீதத்துடன் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் வகித்தது. மேம்பட்டத் தொழில்நுட்பங்களின் பயன்பாடு, அதிக எண்ணிக்கையிலான ஆய்வு நிறுவனங்கள், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் தகவல்தொழில்நுட்பத் தொழிற்தொகுப்புகளின் மேம்பாடு ஆகியவை உற்பத்தித் திறனையும் புத்தாக்கத்தையும் மேலும் வலுப்படுத்தியுள்ளன. சிறப்புமிக்க அரசு நிர்வாகமும் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற்சூழலும் இந்தக் காரணிகளை மேலும் மேம்படுத்தி உற்பத்தித் தேவைகளை நிறைவுசெய்ததுடன் நீடித்த முதலீடுகளை ஈர்த்துள்ளன. இந்தியாவின் உற்பத்தித் துறை வேலைவாய்ப்புகளில் தமிழ்நாடு முன்னணிப் பங்களிப்பாளராக விளங்குகிறது; இது நாட்டின் மொத்தத் தொழிற்சாலைப் பணியாளர்களில் 15 % ஆகும் என்று இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கை 2025–26 தெரிவிக்கிறது.

6. 2024-25இல், மொத்த மாநில உள்நாட்டு மதிப்புக் கூட்டலுக்கு முதன்மைத் துறை 13.4%, இரண்டாம் நிலைத் துறை 33.1%, சேவைத் துறை 53.6% பங்களிப்பை நல்கியுள்ளன. வளர்ந்த பொருளாதாரங்களிலிருந்து கண்டறிந்தவகையில், இரண்டாம் நிலைத் துறைகளின் பங்களிப்பு மேலும் அதிகரிக்கும்பட்சத்தில் அது குறிப்பிடத்தக்க வகையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

7. சேவைத் துறையானது வலுவான செயற்திறத்துடன் 2024-25இல் 11.3% எனும் இரட்டை இலக்க உண்மைப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை எட்டியது. இத்துறையில், மனைவணிகம், பொது மேலாண்மை, போக்குவரத்து, உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள், இதர சேவைத் துறைகள் அனைத்தும் இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டி, இத்துறையின் பரந்துபட்ட வளர்ச்சிப் போக்கை எடுத்துக்காட்டுகிறது.

8. அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்கும் இந்தியாவின் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு

தொடர்கிறது. 2022-23இல் 46.03 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் ஒட்டுமொத்த அந்நிய நேரடி முதலீடு உலகளாவிய அரசியல் சூழல், நெருக்கடியான பொருளாதார நிலைமை ஆகியவற்றின் காரணமாக 2023-24 இல் 44.42 பில்லியன் அமெரிக்க டாலராகச் சரிந்துள்ளது. தமிழ்நாடு இந்நெருக்கடியை வெற்றிகரமாக எதிர்கொண்டது. 2022-23இல் 2,169 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த தமிழ்நாட்டின் அந்நிய நேரடி முதலீட்டு வரவு 2023-24 இல் 2,436 மில்லியன் அமெரிக்க டாலராகவும் மேலும் 2024-25இல் 3,681 மில்லியன் அமெரிக்க டாலராகவும் தொடர்ந்து அதிகரித்துவருகிறது.

9. மற்றொரு பக்கம் தேவையைப் பொறுத்தவரையில், பன்முகத்தன்மை கொண்ட பெரிய அளவிலான நுகர்வோர், அதிகரித்துவரும் தனிநபர் வருமானம், விரைவான நகரமயமாதல் ஆகியவற்றால் குடும்ப நுகர்வு குறிப்பாக நகரம் மற்றும் வளர்ந்துவரும் நகரப் பகுதிகளில் அதிகரித்துள்ளது. உற்பத்தி, மோட்டார் வாகனங்கள், மின்னணு சாதனங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகிய

துறைகளில் தனியாரின் முதலீடுகளால் உருவாகியுள்ள வலுவான முதலீட்டுத் தேவைக்கு, உகந்த வணிகச் சூழலும், முற்போக்கான தொழிற்கொள்கைகளும் ஆதரவாக அமைந்துள்ளன. உட்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலத் திட்டங்களுக்கான அரசின் செலவினங்களால் ஒட்டுமொத்த தேவை மேலும் அதிகரிக்கிறது.

10. தமிழ்நாட்டின் ஏற்றுமதிச் செயல்திறனானது, வளர்ச்சிக்குக் கூடுதல் தூண்டுதலாக உள்ளது. மின்னணு சாதனங்கள், ஜவுளி, தோல் பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடமும், பொறியியல் இயந்திரங்களின் ஏற்றுமதியில் இரண்டாமிடமும் வகிக்கிறது. இந்தியாவின் டெட்ராய்டு என்று அழைக்கப்படும் தமிழ்நாடு, மோட்டார் வாகன உற்பத்தியின் முக்கிய மையமாகத் திகழ்கிறது. 2020–21 இல் 26.15 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த வணிகப் பொருள்கள் ஏற்றுமதி 2024–25இல் ஏறத்தாழ இரு மடங்கு அதிகரித்து 52.07 பில்லியன் அமெரிக்க டாலராகியுள்ளது. இது தமிழ்நாட்டின் வளர்ந்துவரும்

உலகளாவிய போட்டித்திறனையும், தொழில்துறைப் பன்முகத்தன்மையையும் எடுத்துக்காட்டுகிறது.

11. சந்தைசார் தேவைகள், குறுகியகால வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே வேளையில், மனித மூலதனம், உட்கட்டமைப்பு, நிறுவனங்களின் தரம் ஆகிய அளிப்புத்திறன்களில் தமிழ்நாட்டின் நீண்டகால வளர்ச்சித்திறன் வேரூன்றியுள்ளது. இந்த வலுவான அடித்தளமானது, உலகளவிலான நிச்சயமற்ற காலகட்டத்தில்கூடத் தமிழ்நாட்டின் நிலையான வளர்ச்சிப் போக்கிற்கு உதவியுள்ளது.

12. தமிழ்நாட்டின் தனிநபர் வருமான வளர்ச்சியானது, தேசிய சராசரியைவிடத் தொடர்ந்து அதிகமாக உள்ளது. 2024–25இல் ரூ.3.62 இலட்சத்தை எட்டிய தனிநபர் வருமானம், தேசிய சராசரியான ரூ.2.05 இலட்சத்தைக் காட்டிலும் 1.77 மடங்கு அதிகமானது. தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு நாட்டில் மூன்றாமிடம் வகிக்கிறது.

13. மற்ற மாநிலங்களில் குறிப்பிட்ட ஒரு பெருநகரத்தில் பொருளாதாரம் குவிந்துள்ளதைப் போலன்றி, தமிழ்நாட்டின் வளர்ச்சியானது பல்வேறு நகரங்களில் சீராகப் பரவலாக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், மதுரை, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, சேலம் முதலிய நகரங்கள் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கி, நகர-ஊரக இடைவெளியைக் குறைப்பதற்கு உதவியுள்ளன. குறிப்பிடத்தக்கதொரு சாதனையாக, தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டமும் தற்போது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில் வழித்தடத் திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய விரிவான தொழிற்துறை ஒருங்கிணைப்பைக் கொண்ட ஒரே மாநிலமாகத் தமிழ்நாடு வளர்ந்துள்ளது.

14. 2023-24 ஆண்டுக்கான மாவட்டவாரியான தனிநபர் வருமானத் தரவுகள், நகரமயமாதல், தொழில்துறை மேம்பாடு, நிலவியல் சாதக சூழல் ஆகியவற்றால் எழும் வேறுபாடுகளை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், சிறப்பான செயல்திறன் கொண்ட எட்டு மாவட்டங்களின்

தனிநபர் வருமானமானது, தெலங்கானா, கர்நாடகம், ஹரியானா போன்ற சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களின் தனிநபர் வருமானத்தைவிட அதிகமாக உள்ளது. குறிப்பாக, 38இல் 32 மாவட்டங்களின் தனிநபர் வருமானம் தேசிய சராசரி தனிநபர் வருமானத்தைவிட அதிகம்.

15. பெருமளவில் தொழில்மயமான, நகரமயமான பொருளாதாரமான தமிழ்நாடு 2030 ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எட்டுவதற்கான இலக்கை நிர்ணயித்துள்ளது. தொழில் மற்றும் தொழில்நுட்பச் சங்கிலித் தொடரில் மாநிலம் தொடர்ந்து முன்னேறிவருவதால், டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு, மேம்பட்ட வருமானம் ஈட்டும் நிலை ஆகியவற்றை அடைவதற்குத் தகுந்த நிலையில் இருக்கிறது.

16. உலக அளவிலான பணவீக்கம் 2023இல் 6.6% ஆகவும், 2024இல் 5.8% ஆகவும் படிப்படியாகக் குறைந்துள்ளது. இந்தியாவின் சில்லறைப் பணவீக்கமும் 2023–

**24இல் 5.5%இலிருந்து 2024-25இல் 4.6% ஆகவும் 2025-26இல் டிசம்பர் வரை 1.7% ஆகவும் மேலும் குறைந்துள்ளது. தமிழ்நாட்டிலும் இதே வகையில், 2023-24இல் 5.4% ஆக இருந்த சில்லறைப் பணவீக்கமானது 2024-25இல் 4.6% ஆகவும் 2025-26இல் டிசம்பர் வரை 2.3% ஆகவும் மேலும் குறைந்துள்ளது. 2020-21 முதல் 2024-25 வரையிலான நீண்ட காலகட்டத்தில் தமிழ்நாடு, இந்தியா இரண்டிலும் சராசரி பணவீக்க வீதம் 5.7% ஆக இருந்தது. 2024-25இல் இந்தியாவின் 18 முதன்மை மாநிலங்களில், சில்லறைப் பணவீக்கத்தில் தமிழ்நாடு பத்தாம் இடத்தில் இருந்தது.**

17. **2023-24இல் 5.2% ஆக இருந்த தமிழ்நாட்டின் நகர்ப்புறப் பணவீக்க வீதம் 2025-26இல் 2.5% ஆகக் குறைந்தது. அதே நேரத்தில், கிராமப்புறப் பணவீக்க வீதம் 5.8% இலிருந்து 2.1% ஆகக் குறைந்தது. நகர்ப்புறப் பணவீக்க வீதமானது மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பணவீக்கத்திற்கு முக்கியக் காரணியாக இருக்கிறது. முதன்மைப் பிரிவுகளில், உணவுப் பணவீக்கமானது 2025-26இல்**

–0.003% என மிகவும் குறைந்துள்ள நிலையில், உடைகள் மற்றும் காலணிகளின் பணவீக்கம் 1.3% என்ற மிதமான அளவில் உள்ளது.

18. பணவீக்கம் என்பது முதன்மையாக ஒரு பணவியல் நிகழ்வு என்றாலும், அதன் தாக்கமானது வாங்கும் சக்தி குறைவதன் மூலமாக வீடுகளில் நேரடியாக உணரப்படுகிறது. தமிழ்நாடு அரசானது, தானியங்கள், பயறு வகைகள், உணவு எண்ணெய், மின்சாரம் போன்ற அத்தியாவசியங்களை மானிய விலையில் வழங்குவதோடு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட வருமான ஆதரவுத் திட்டங்களால் பணவீக்கத் தாக்கங்களைத் தணிக்கிறது.

19. தமிழ்நாட்டின் வேளாண்மை பெரிதும் பருவ மழையையே நம்பியுள்ளது. வேளாண் துறையானது ரூ.1.9 இலட்சம் கோடி பங்களிக்கிறது. இது மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டலில் 6.6% உடன் ஐந்தாவது பெரிய துறையாக இருக்கிறது. மாநிலத்தின் நிலப்பரப்பில் மொத்தச் சாகுபடி

**பரப்பானது 2016-17இல் 43.31% இலிருந்து 2023-24இல் 47.58% ஆக அதிகரித்துள்ளது. 2024-25இல் மொத்தச் சாகுபடிப் பரப்பு 62.25 இலட்சம் ஹெக்டேராகவும் சராசரி போகம் 1.29 ஆகவும் உள்ளது.**

20. **தமிழ்நாடு 2024-25இல் வேளாண் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்துள்ளது. கேழ்வரகு, கரும்பு விளைச்சலில் முதலாமிடத்தையும், எண்ணெய் வித்துகளில் இரண்டாமிடத்தையும் நிலக்கடலை விளைச்சலில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது. மேலும், வாழை சாகுபடியில் தமிழ்நாட்டின் வெற்றியை பிராந்திய அளவில் தோட்டக் கலைத்துறையின் சாதனை என்று இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கையும் குறிப்பிட்டுள்ளது.**

21. **தமிழ்நாட்டில் உழவர்களை ஆதரிப்பதில் வேளாண் கடனுதவிகள் முக்கியப் பங்குவகிக்கின்றன. 2019-20இல் ரூ.2.23 இலட்சம் கோடியாக இருந்த வேளாண் கடன் வழங்கலானது 2023-24இல் ரூ.4.52 இலட்சம் கோடியாக**

இரு மடங்குக்கும் மேலாக அதிகரித்து, வேளாண் கடன் வழங்குதலின் ஒட்டுமொத்த வருடாந்திர வளர்ச்சி வீதம் ஏறத்தாழ 19% ஆக உள்ளது. 2023-24 இல் ஏறத்தாழ 299 இலட்சம் உழவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 78% சிறு குறு விவசாயிகள் ஆவர்.

22. கால்நடை வளர்ப்புத் துறையானது, 2024-25இல் மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டலுக்கு ரூ.1.47 இலட்சம் கோடி பங்களித்திருக்கிறது, இது மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டலில் 5.1% ஆகும். 2001-02இல் 39,249 இலட்சமாக இருந்த முட்டை உற்பத்தி, வருடாந்திர ஒட்டுமொத்த வளர்ச்சி வீதம் 8.2% என்ற அளவில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்து 2023-24இல் 2.2 இலட்சம் மில்லியன் ஆக அதிகரித்துள்ளது. மொத்த மாநில மதிப்புக் கூட்டலில் மீன் பிடித்தல், மீன் வளர்ப்பு ஆகியவை 0.99% பங்களிப்பை வழங்கி, 2023-24இல் 1.34 இலட்சம் டன் மீன் பொருள்களை ஏற்றுமதி செய்து, ரூ.6,854 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியது.

23. நிலத்தடி நீர்க் குறைவு, காலநிலை மாற்றம் போன்ற சவால்களைத் தமிழ்நாடு திறம்படக் கையாண்டால், வேளாண்மை மற்றும் வேளாண்சார் துறைகளில் விரைவான வளர்ச்சியை அடைய முடியும். காலநிலைக்கேற்ற நடைமுறைகளைக் கையாளுதல், இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல், அறுவடைக்குப் பிந்தைய மதிப்புக் கூட்டலில் அதிகக் கவனம்செலுத்துதல் மூலம் பண்ணை வருமானத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்க முடியும்.

24. ஏற்றுமதி ஆயத்தநிலைக் குறியீட்டில் தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கிறது. கடன் – வைப்பு விகிதம் 120.5% ஆக உள்ளது. 2024-25இல் 52.07 பில்லியன் அமெரிக்க டாலருடன் ஏற்றுமதியில் மூன்றாமிடம் வகிக்கிறது.

25. தமிழ்நாட்டின் உட்கட்டமைப்புக் கொள்கையானது, தனித்த சொத்து உருவாக்கங்களிலிருந்து விலகி, அமைப்புகள் அடிப்படையிலான மேம்பாட்டை நோக்கிய மாற்றத்தைக் காட்டுகிறது. அதிகரித்துவரும் மூலதனச்

செலவினங்களானது போக்குவரத்து, சரக்குப் பெயர்ச்சிமை (Logistics), ஆற்றல், நீர்வளம், நகர மற்றும் ஊரக சேவைகளை வலுப்படுத்தியிருக்கிறது. பொதுப் போக்குவரத்து, மின் வாகன இயக்கம், மெட்ரோ விரிவாக்கம், டிஜிட்டல் ஒருங்கிணைப்பு ஆகியவற்றிலான முதலீடுகள் மக்களை மையப்படுத்தும் போக்குவரத்து நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துறைமுகங்கள், விமான நிலையங்கள், சரக்குப் பெயர்ச்சிப் பூங்காக்கள் வர்த்தகத்திற்கான தேசிய நுழைவாயிலாகத் தமிழ்நாட்டை நிலைநிறுத்தியுள்ளன. அதே நேரத்தில், ஒருங்கிணைப்பு, நிலம் கையகப்படுத்துதல், ஒழுங்குமுறை அனுமதிகள், திறன் மேம்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய செயல்பாட்டுச் சவால்கள் இன்னும் முட்டுக்கட்டைகளாக உள்ளன.

26. வேலைவாய்ப்பு உருவாக்கமானது, பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக நிலைத்தன்மைக்கும் மையமாக உள்ளது. 2021-22இல் 71.5%ஆக இருந்த தமிழ்நாட்டின் தொழிலாளர் பங்கேற்பு வீதமானது, 2023-24இல் 72.1%

ஆக உயர்ந்துள்ளது. இதே காலகட்டத்தில் இந்தியாவின் தொழிலாளர் பங்கேற்பு வீதமானது, 66.2% இலிருந்து 71.3% ஆக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் வேலையின்மை வீதமானது 5.1%இலிருந்து 3.5% ஆகக் குறைந்துள்ளது. தேசிய அளவில் இவ்வீதமானது, 4% இலிருந்து 3.2% ஆகக் குறைந்துள்ளது. உயர்கல்விச் சேர்க்கை அதிகரிப்பு, திறன் மேம்பாடு ஆகியவற்றுடன் வலுவான சமூகப் பாதுகாப்பு அமைப்பும் இந்த விளைவுகளுக்குப் பங்களித்திருக்கக்கூடும்.

27. பதிற்றாண்டுகளாகக் கல்வி, சமூக நலம் மற்றும் பொருளாதாரப் பன்மைத்துவம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பலனைத் தமிழ்நாட்டின் தொழிலாளர் சந்தை விவரங்கள் புலப்படுத்துகின்றன. பெருந்தொற்றுக்குப் பிறகான குறியீடுகள் தொழிலாளர் பங்கேற்பு அதிகரிப்பு, அதிகளவிலான பணியாளர்-மக்கள்தொகை விகிதங்கள், குறைந்துவரும் வேலையின்மை, மாத ஊதிய வேலைவாய்ப்புகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் ஆகியவற்றுடன் தரமான

வேலை வழங்கும் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு உள்ளதை எடுத்துக்காட்டுகின்றன. வேளாண் துறையிலிருந்து படிப்படியாக வெளியேறும் தொழிலாளர்களை நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் ஈர்த்துவருகின்றன. எனினும், இவ்வளர்ச்சியானது பாலின இடைவெளிகளுடன் குறிப்பாக, இளைஞரிடையே சீரற்றதாக இருக்கிறது. கல்வியிலிருந்து நிலையான வேலைவாய்ப்புக்கான வழிகளை வலுப்படுத்துவதோடு, குடும்பப் பராமரிப்புச் சுமைகள், பாதுகாப்பு, போக்குவரத்து, பணியிடத் தக்கவைப்பு ஆகியவற்றை நிவர்த்திசெய்வதும் வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில் முக்கியமானதாக இருக்கும்.

28. தமிழ்நாட்டின் வளர்ச்சியானது சமூக நலக் கொள்கைகளில் பின்வாங்காமல், பொருளாதாரக் கட்டமைப்புகளை மேம்படுத்தியதால் எட்டப்பெற்றது என்பதே இந்த ஆய்வறிக்கை நெடுகிலும் வெளிப்படும் மையக்கருத்தாகும். கல்வி, சுகாதாரம், போக்குவரத்து,

கண்ணியமான வாழ்வு ஆகியவற்றை நலத்திட்டங்கள் என்பதைக் காட்டிலும் சமூக உரிமைகளாக நடைமுறைப்படுத்தியதன் வாயிலாக, காலங்காலமாக விலக்கிவைக்கப்பட்டிருந்தோரையும் நவீன வளர்ச்சியின் செயல்திறமிக்கப் பங்கேற்பாளர்களாகத் தமிழ்நாடு உருமாற்றியிருக்கிறது. இது சமத்துவமும் செயல்திறனும் ஒன்றையொன்று வலுப்படுத்தும் ஒரு தனித்துவமிக்க வளர்ச்சி முன்மாதிரியை உருவாக்கியுள்ளது.

29. தமிழ்நாடு அரசானது, சமூக நலத் துறைக்கான செலவினங்களைத் தொடர்ந்து அதிகரித்துவருகிறது. 2021-22இல் ரூ.1,13,268 கோடியிலிருந்து 2025-26இல் ரூ.1,57,864 கோடியாக (திருத்தப்பட்ட மதிப்பீடு) அதிகரித்துள்ளது. இந்தக் காலகட்டத்தில், தமிழ்நாடு இந்தியாவிலேயே மிகவும் விரிவான, புதுமையான நலத் திட்டக் கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளது. நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞரின் மகளிர் உரிமைத் திட்டம், பெருமளவிலான வீட்டு வசதி

மற்றும் புதுப்பித்தல் முன்னெடுப்புகள் ஆகியவை திறன்களை விரிவுபடுத்துகின்றன; குடும்பத்தின் நிதிச் சுமையைக் குறைக்கின்றன; விருப்பார்வங்களை வலுப்படுத்துகின்றன. அரசின் இந்நடவடிக்கைகள் வெறும் மறுபகிர்வு மட்டுமல்ல; நுகர்வை நிலைப்படுத்தி, குடும்பத் தேவைகளை நிறைவேற்றி, தொழிலாளர்களுக்கு மன அழுத்தமற்ற வேலைவாய்ப்புகளை உறுதிசெய்கின்றன. இம்முன்மாதிரிகளில் சில தேசிய அளவில் முன்னோடியாக அமைந்திருப்பதுடன் மற்ற மாநிலங்களாலும் பின்பற்றப்படுகின்றன.

30. தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாடு குறிப்பிடத்தக்க சாதனையையும் புதிய முன்னெடுப்புகளையும் குறிக்கிறது. கல்வி, சுகாதாரப் பயன்கள், கருவுறுதல் குறைப்பு, நிதி உள்ளாக்கம், பெண்களின் அரசியல் பங்கேற்பு ஆகியவற்றில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. அதிக அளவில் கல்வியறிவு பெற்றிருந்தாலும், இளம் மற்றும் படித்த பெண்களிடையே தொழிலாளர் பங்கேற்பானது குறைவாகவே உள்ளது. குடும்பப் பராமரிப்புச் சுமைகள்,

சமூக விதிமுறைகள், போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடன், உயர்தர வேலைவாய்ப்புகளிலுள்ள பற்றாக்குறையும் முட்டுக்கட்டைகளாகத் தொடர்கின்றன. அடுத்த கட்ட வளர்ச்சியானது, வேலைவாய்ப்பு வழங்கல் என்னும் நிலையிலிருந்து மேம்பட்டு, குழந்தைப் பராமரிப்பு வசதிகள், வீட்டு வசதி, போக்குவரத்து ஆகியவற்றை விரிவுபடுத்துதல், விரைவான வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள புதிய தொழிற்துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பராமரிப்புக் கடமைகளைப் பகிர்ந்துகொள்வதற்கான நடைமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பெண்களின் வேலைவாய்ப்பை மையப்படுத்தும் கொள்கையை நோக்கி மாறியாக வேண்டும்.

31. இந்தியாவில் அதிகக் கல்வியறிவுபெற்ற மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு தொடக்க, உயர்நிலை, உயர்கல்விச் சேர்க்கையில் தொடர்ந்து சிறந்து விளங்குகிறது. 2024-25இல் 463 பொறியியல் மற்றும் கட்டடக்கலைக் கல்லூரிகள், 492 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுடன்

நாட்டிலேயே தமிழ்நாடு அதிக எண்ணிக்கையிலான தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களைக் கொண்டுள்ளது. தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) 2025இன்படி, இந்தியாவின் சிறந்த நூறு கல்வி நிறுவனங்களில் 17 நிறுவனங்களுடன், மற்ற மாநிலங்களைவிட அதிக எண்ணிக்கையுடன், தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. உயர் கல்விச் சேர்க்கை விகிதத்தில் தேசிய சராசரி 28.4% ஆக இருக்கும் நிலையில், 47% உடன் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. உயர் கல்வியில் பெண்களின் சேர்க்கை விகிதத்தில் தேசிய சராசரி 28.5% ஆக இருக்கும் நிலையில், தமிழ்நாடு 47.3% உடன் மூன்றாமிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டின் சமூக நல மற்றும் கல்வி முன்மாதிரியின் ஆற்றல்மிக்கச் செயல்பாடுகளை இந்த விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

32. தமிழ்நாடு முக்கிய சுகாதாரக் குறியீடுகளிலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது. 2023இல் சிசு இறப்பு வீதம் 1,000 உயிருள்ள பிறப்புகளுக்கு மிகக் குறைந்த

அளவாக 12, குறைந்த பிறப்பு வீதம் 12, 2022-23இல் மிகக் குறைந்த அளவாக 1.43% பன்முக வறுமைக் குறியீடு, ஆயுள் காலம் 73.4 ஆண்டுகளுடன் நாட்டிலேயே மூன்றாவது இடம்.

33. தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேலாண்மை நிறுவனரீதியாக மேம்பட்டிருந்தாலும், தொழில்மயமாதல், நகரமயமாதல், காலநிலை இடர்களால் தொடர்ந்து அழுத்தங்களை எதிர்கொள்கிறது. நீர் மாசுபாடு, கழிவு மேலாண்மை, காற்றின் தரம் தொடர்பிலான தொடர்ச்சியான சவால்கள் தொழில்நுட்ப மேம்பாடு, கடுமையான செயலாக்கம், பெரிய அளவில் சமூக அடிப்படையிலான வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைக் கோருகின்றன. ஒருங்கமைவில்லாத நிறுவனச் செயல்பாடுகளும் தரவுகளும் ஒருங்கிணைந்த கொள்கை உருவாக்கத்தைப் பலவீனப்படுத்துகின்றன. இது ஆழ்ந்த ஒருங்கிணைப்பு, ஒன்றிணைக்கப்பட்ட தரவு அமைப்புகளுக்கான தேவையை உணர்த்துகிறது.

34. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கு நிதிக் கொள்கை பெருமளவு ஆதரவளித்துள்ளது. பெருந்தொற்றுக் காரணமான விரிவாக்க நடவடிக்கைகளால் பற்றாக்குறையும் கடனும் அதிகரித்தபோதிலும், தொடர்ந்து வந்த ஆண்டுகளில் மூலதன உருவாக்கத்திற்கான வலுவான உந்துதலுடன் பொருளாதாரம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. 2020-21 முதல் 2025-26 வரையிலான காலத்தின் மொத்த மூலதனச் செலவினமான ரூ.2.54 இலட்சம் கோடியானது, பொதுச்சொத்து உருவாக்கத்தின் முக்கியத்துவத்தைத் தீர்க்கமாக வலியுறுத்துகிறது. 15ஆவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள வரம்பெல்லையைவிடக் கடன் - ஜிஎஸ்டிபி விகிதம் குறைவாக இருந்தபோதிலும், ஊதியத் திருத்தங்கள், ஓய்வூதியங்கள், ஜிஎஸ்டி மறுசீரமைப்பு ஆகியவற்றால் எதிர்காலத்தில் நிதிசார் அழுத்தங்கள் உருவாகும். வளர்ச்சியைத் தக்கவைக்க வளங்களை முறையாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

35. நிறைவாக, தமிழ்நாட்டின் அனுபவங்கள் அடிப்படைக் கோட்பாட்டை உறுதிப்படுத்துகின்றன: சமூக நீதி என்பது மேம்பாட்டுக்கான விலையல்ல, அது ஆற்றல்வாய்ந்த வினையூக்கி. சமூக நலனை அரசு மக்களுக்கான உரிமையாகக் கருதி, விலக்கப்பட்டவர்களைப் பங்கேற்பாளர்களாகவும், பற்றாக்குறையை உற்பத்தியாகவும் மாற்றியிருக்கிறது. இந்த முன்மாதிரியின் தகவமைப்புத்தன்மையானது, அதிகரித்துவரும் முதியோர் எண்ணிக்கை, நகரமயமாதல், காலநிலை அழுத்தங்கள், நிதிக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்ப மாற்றம் ஆகியவற்றால் அடுத்த பத்தாண்டுகளில் பரிசோதிக்கப்படும். நம் முன் உள்ள சவால் என்பது சமூகநலத் திட்டங்களிலிருந்து பின்வாங்குவதல்ல, மாறாக, திட்டங்களை மேலும் சிறந்த விளைவுகளை அளிக்கும் வகையிலும் மீள்தன்மைகொண்டதாகவும் புதிதாக எழும் யதார்த்தங்களுக்கு ஏற்றவகையிலும் புதுப்பித்தலாகும். சமத்துவத்துடன் கூடிய உயர்வளர்ச்சியைத் தக்கவைப்பது என்பது, சமூக மற்றும்

மூலதன முதலீடுகளுக்கான நிதிப் பரப்பைப் பாதுகாத்தல், தொழிலாளர் – சந்தை உள்ளாக்கத்தை வலுப்படுத்துதல், தொழிற்துறை மற்றும் சேவைத் துறையின் வளர்ச்சியைக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பை நோக்கி மறுசீரமைத்தல், காலநிலை மீள்தன்மை கொண்ட உட்கட்டமைப்புக்கு முழுமையாக மாறுதல், பல்துறை ஒருங்கிணைப்புடன் கூடிய சூழலியல் மேலாண்மை, சமூக நலத்திட்டங்களின் வாயிலாகப் பெண்கள் பெற்றிருக்கும் பலன்களைப் பொருளாதாரப் பங்கேற்பாகவும், தலைமைத்துவமாகவும் மாற்றியமைத்தல் ஆகியவற்றைப் பொருத்தது.

தமிழ்நாடு அரசு
**மாநில திட்டக் குழு**